# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 150 — 1975 පෙබරවාරි 07 වැනි සිකුරාදා — 1975.02.07

150 ம் இலக்கம்—1975 ம் ஆண்டு பெப்புருவரி மாதம் 07 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி IV — உள்ளூராட்சி

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்துவைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் .. .. .. | — | வரவு செலவுக் கூற்றுக்கள் .. .. .. | — |
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | 33 | வரவு செலவு திரட்டுக்கள் .. .. .. | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும், பிறவும் .. | — | ஆதன விற்பனைகள் .. .. .. | — |
| துணைவிதிகள் .. .. .. | 37 | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் .. .. | — |
| உள்ளூராட்சி அதிகார நிலையத் தேர்தற் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் .. .. .. | — | நானாவித அறிவித்தல்கள் .. .. .. | 40 |


## பதவிகள் — வெற்றிடம்

*“இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை” யின் IV ஆம்பகுதியின் விளம்பரப்படுத்தப்படும் உள்ளூராட்சிச் சேவைப் பதவிகளின் நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகள்*

படிகள்.—அரசாங்க உத்தியோகத்தர்களுக்குப் பொருந்தும் விகிதங்களுக்கும் நிபந்தனைகளுக்கும் இணங்கத் திருமணப்படி கொடுக்கற்பாலது.

2. சேவைகள் நிபந்தனைகள்.—1969 ம் ஆண்டின் 18 ஆம் இலக்க உள்ளூராட்சிச் சேவை அதிகாரச் சட்டத்திற்கும், உள்ளூராட்சிச் சேவைப் பிரமாணங்களுக்கும், அதிகார சபை காலத்திற்குக் காலம் விதிக்கும் மற்றும் ஏதும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டதாகவே நியமனங்கள் அமையும்.

3. நியமன விதிகள்.—(அ) உ. ஆ. சேவையில் மாதாந்தச் சம்பளம் பெறும் பதவிகளுக்கு நியமிக்கப்படும் சகல உத்தியோகத்தர்களும் உ. ஆ. சே. சகாயநிதிக்கு கட்டுப்பணம் செலுத்த வேண்டும். ஊழியர் தமது திரட்டிய வேதனத்தில் 6 சதவிகிதத்தைச் செலுத்துமாறு வேண்டப்படுவர். ஊழியர் நியமிக்கப்படும் உள்ளூராட்சி மன்றம், அவர் பொருட்டு இந்நிதிக்கு அவரது திரட்டிய வேதனத்தின் 9 சத விகிதத்தைச் செலுத்தும்.

(ஆ) அரசாங்கத்தின் கீழ் சேவையிலிருக்கும் உத்தியோகத்தர்கள் அரசாங்க இளைப்பாற்றுச் சம்பளம் பற்றிய விதிகளின் 21 வது பிரிவின்படி விடுவிக்கப்பட்டு, உள்ளூராட்சிச் சேவையில் இளைப்பாற்றுச் சம்பளத்திற்குரிய பதவிகளுக்கு இடமாற்றப்பட்டால் அவர்களின் இளைப்பாற்றுச் சம்பள உரிமைகள் பாதுகாக்கப்படும். உள்ளூராட்சிச் சேவையில் ஒரு இளைப்பாற்றுச் சம்பளம் பெறும் பதவியை வகிக்கும் எந்தவொரு ஊழியரும் அச் சேவையில் வேறொரு இளைப்பாற்றுச் சம்பளம் பெறும் பதவிக்கு அவர் பதவியுயர்த்தப்பட்டால் அல்லது நியமிக்கப்பட்டால், அவர் நியமிக்கப்பட்ட அல்லது பதவியுயர்த்தப்பட்ட புதிய பதவியிலும் அவர் தொடர்ந்து இளைப்பாற்றுச் சம்பள உரிமைகளைப் பெறுவார்.

(இ) உள்ளூராட்சித் தாபனங்களில் அவற்றின் இளைப்பாற்றுச் சம்பள விதானங்கள் அல்லது விதிகளின் கீழ் இளைப்பாற்றுச் சம்பளத்திற்குரிய பதவிகளை வகிப்பவர்கள், விடயத்துடன், அவர்கள் கடைசியாக இளைப்பாறும்போது கொடுக்கப்படும் இளைப்பாற்றுச் சம்பளம், 1969 ம் ஆண்டின் 18 ம் இலக்க உள்ளூராட்சிச் சேவைக் கட்டளைச் சட்டத்தின் கீழ் உள்ளூராட்சிச் சேவைக்கு அவர்கள் மாற்றப்பட்ட திகதிக்கு நேர்முந்தியுள்ள திகதியன்று அந்த உள்ளூராட்சித் தாபனத்தில் வேலை பார்த்தவர்களோ அந்த உள்ளூராட்சித் தாபனத்தின் இளைப்பாற்றுச் சம்பள விதானங்களுக்கு அல்லது விதிகளுக்கு அமைவாக இருக்கும்.

(ஈ) உள்ளூராட்சிச் சேவையில், மாதாந்த வேதனம் பெறும் பதவிகளுக்கு நியமிக்கப்படும் ஊழியர்களுக்கு விதவைகள், அனாதைகள் இளைப்பாற்றுச் சம்பளத்திட்டம் பொருந்தமாட்டாது. எவ்வாறாயினும் பெண்களும் 55 வயதுக்கு மேற்பட்ட உத்தியோகத்தர்களும், உள்ளூராட்சிச் சேவைக்கு நியமிக்கப்படுவதற்கு நேர்முந்திய தேதியில், அரசாங்க சேவையில் இளைப்பாற்றுச் சம்பளம் பெறும் பதவிகளை வகித்தவர்களும் தவிர, உ. ஆ. சேவையில் இளைப்பாற்றுச் சம்பளம் பெறும் பதவி ஒன்றிலிருந்து அச் சேவையில் வேறொரு இளைப்பாற்றுச் சம்பளம் பெறும் பதவிக்கு நியமிக்கப்படுபவர்கள் அல்லது பதவியுயர்த்தப்படுபவர்கள் 1952 ம் ஆண்டு ஜூலை 30 ந் திகதி வெளியான 10,329 இலக்க அரசாங்க விசேட வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட்ட, 1952 ம் ஆண்டின் உள்ளூராட்சிச் சேவை விதவைகள், அனாதைகள் இளைப்பாற்றுச் சம்பள நிதிப்பிரமாணங்களின்படி, ஸ்தாபிக்கப்பட்ட உ. ஆ. சே. விதவைகள், அனாதைகள் இளைப்பாற்றுச் சம்பள நிதிக்கு தங்களது கருதப்படும் அடிப்படைச் சம்பளத்தின் 4 சத விகிதத்தைச் செலுத்த வேண்டும். குறித்த உள்ளூராட்சி மன்றம், கருதப்படும் அடிப்படைச் சம்பளத்தின் 3 சத விகிதத்தைச் செலுத்தும்.

**வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும்**

**அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்**

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானி அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்குத் திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆண்டு மே மீ 5 ந் உ

(உ) நியமிக்கப்படுபவர்கள் குறித்த உள்ளூராட்சித் தாபனம் நிர்ணயிக்கும் தொகைக்கும் ரொக்கமாக அல்லது உள்ளூராட்சிச் சேவை அதிகார சபை அங்கீகரிக்கும் உத்தரவாதச் சங்கம் ஒன்றின் மூலமாக நம்பிக்கை உத்தரவாத முறிகொண்டு பிணை செலுத்துமாறு வேண்டப்படலாம்.

(ஊ) உள்ளூராட்சிச் சேவையில் அட்டவணைப்படுத்தப்பட்ட பதவிகளை வகிக்காதவர்களாயிருந்து நியமிக்கப்படுபவர்கள் இலங்கையின் எப்பகுதியிலேனும் சேவை செய்வதற்கு வேண்டிய தேக தகுதியுடைமை பற்றி முறையான தகைமை பெற்ற வைத்தியர் ஒருவரின் வைத்திய பரிசோதனையிற் சித்தியெய்துமாறு வேண்டப்படுவர்.

(எ) வேறுவிதம் குறிக்கப்பட்டாலன்றி நியமனம் பொதுவாக மூன்றுண்டு காலத்துக்கு தகுதிகாண் நிலையில் இருக்கும். அல்லது மூன்றுண்டு காலத்துக்குப் பின்னர் உறுதிப்படுததுவதற்கு அமைவானதாக இருக்கும்.

(ஏ) விண்ணப்பதாரர்கள், வேண்டப்படும் நேரத்தில் தங்களுடைய பிறப்புச் சான்றிதழ்களையோ, அல்லது அதற்குப் பதிலாகத் தங்களுடைய உண்மையான வயதைக் குறிக்கும் சான்றிதழ்களையோ காட்டுவதற்கு ஆயத்தமாக இருத்தல் வேண்டும்.

(ஐ) நியமிக்கப்படுபவர்கள் தீவின் எப்பகுதியிலாயினும் சேவை செய்தல் வேண்டும்.

4. உள்ளூராட்சிச் சேவைக்குப் புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள்.—(1) எப்பதவிக்கேனும் நீடியகாலம் விதிக்கப்பட்டாலன்றிச் சந்தர்ப்பத்திற்கேற்ப, இளைப்பாற்றுச் சம்பளமுள்ள பதவிகளில்/இளைப்பாற்றுச் சம்பளமில்லாத பதவிகளில் நியமிக்கப்படும் "புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்களின்" தகுதிகாண் நிலை/பரீட்சார்த்த காலம் மூன்று ஆண்டுகளாக இருக்கும்.

(2) புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள் அரசாங்கத்தின் மொழிக்கொள்கையை வினைப்படுத்துவதற்கு ஏதுவாக 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசாங்க மொழிச்சட்ட ஏற்பாடுகளுக்கும் இனிமேல் ஆக்கப்படும் சட்டங்கள், விதிகளுக்கும் அமைந்தொழுகுவார்களென்ற நிபந்தனைகளுக்குட்படல் வேண்டும்.

(3) தமது கடமைகளைத் திறம்பட ஆற்றுவதற்கு அத்தியாவசிய மற்ற புறநடையான சந்தர்ப்பங்களில் ஒழிய அவர்கள் தங்களுடைய தகுதிகாண்/பரீட்சைகாண் காலத்தில் அரசகரும மொழியில்—சிங்களத்தில் கடமை செய்யும் அறிவு பெறல் வேண்டும்.

(4) தகுதிகாண்/பரீட்சைகாண் காலமுடிவில் அவர்களின் நியமனம் உறுதிப்படுத்துகின்றமை பிறவற்றோடு, குறிப்பிட்ட கால வரையறைக்குள், க. பொ. த. ப. தரத்திற்கு மேற்படாத நிலை வரையுள்ள, விதிக்கப்பட்ட சிங்களத்தேர்ச்சி சோதனைகளில் சித்தியடைவதைப் பொறுத்திருக்கும். குறிக்கப்பட்ட காலத்துள் இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடையத் தவறினால், சோதனைகளில் தேறும்வரை அவர்களுக்குரிய வேதனப் பெருக்கங்கள் செலுத்தப்படமாட்டாது. சிங்களத்தில் தேர்ச்சியடைய வேண்டிய தரத்தை அடையாத உத்தியோகத்தர்களின் சேவைகள், அவர்களின் தகுதிகாண்/பரீட்சைகாண் காலமுடிவில் நிறுத்தப்படலாம்.

(5) கல்வியும் ஏனைய தகைமைகளும்.—சி. பா. த. ப. பரீட்சை அல்லது அதற்குச் சமமான அல்லது உயர்ந்த பரீட்சை ஆகக் குறைந்த தகைமை என்று விதிக்கப்பட்ட எல்லாச் சேர்வுத் திட்டங்களிலும், சிங்கள மொழியில் கல்வி பயின்ற, சிங்களப் பரீட்சார்த்தி சிங்கள பாஷையில் அல்லது அதற்குச் சமமானதில் சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரம் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

(1963 ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 8 ம் திகதிக்கு முன்னர் தொடக்கம் உள்ளூராட்சிச் சேவையிலிருந்துவரும் உத்தியோகத்தர்களுக்கும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள வேறு பதவிகளுக்கு நியமனம் பெறவிரும்புபவர்களுக்கும் இந்தத் தகைமை பொருந்தாது).

குறிப்பு (1).—சிங்களமொழி மூலம் உள்ளூராட்சி சேவையில் புகும் தகைமை பெறும் புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள் உறுதிப்படுத்துவதற்கு ஒரு முன் தேவையாக இத்தேர்ச்சி சோதனையில் சித்தியடைவதிலிருந்து விலக்குப்பெறுவர்.

குறிப்பு (2).—இதில் "புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள்" என்பது அரசகரும மொழிக் கொள்கையின் நோக்கத்தின்படி 1960 ம் ஆண்டு ஜனவரி மாதம் 29 ஆம் திகதியன்று அல்லது அதற்குப் பின்னர் பிரசுரமாகும் விளம்பரங்களின் மூலம் உள்ளூராட்சிச் சேவையிலுள்ள பதவிகளில் நியமிக்கப்படும் உத்தியோகத்தர்களுக்கும் பொருந்தும்.

குறிப்பு (3).—4 (3) ஆம், (4) ஆம் பந்திகளில் உள்ள ஏற்பாடுகள் அரசாங்க அலுவலகங்களில் கடமையாற்றும் முன் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள நியமனங்களை ஏற்பதற்காகப் பதவியிலிருந்து விடுவிக்கப்பட்டவர்களுக்கும் பொருந்தாது.

5. ஒவ்வொரு விண்ணப்பதாரரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபிக்க வேண்டும். "இலங்கையர்" என்பது வம்சாவழியாகவோ பதிவு செய்ததாலோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

6. போர்ப்படையிற் சேவை செய்த முன்னாள் வீரர்களுக்கான சலுகை.—(அ) விண்ணப்பிக்கப்பட்ட பதவிகளுக்கு விதந்துரைக்கப்பட்ட மிகக் கூடிய வயது எல்லைக்குள் தம்மைக் கொண்டுவர உதவும் விதத்தில் தமது வயதுகளிலிருந்து கிரமமான படையிற் தாம் ஆற்றிய சேவையைக் கழிப்பதற்கு, போர்ப்படையிற் சேவை செய்த முன்னாள் வீரர்கள் அனுமதிக்கப்படுவர்.

(ஆ) எந்தப் பதவிகளுக்குமுரிய புதிய நியமனத் திட்டத்தில் விதந்துரைக்கப்பட்ட மிகக் குறைந்த கல்வித் தகைமையிலிருந்து, அடுத்துக் குறைவான பரீட்சையைத் தமது மிகக் குறைந்த கல்வித் தகைமையாகக் கருதுவதற்குப் போர்ப்படை வீரர்கள் அனுமதிக்கப்படுவர்.

7. வயதுச்சலுகை.—இரு வருட தொடர்ச்சியான சேவையுள்ள நிரந்தரப் பதவி வகிக்கும் உள்ளூராட்சி மன்ற ஊழியர்கள் உள்ளூராட்சி சேவையிலுள்ள பதவிகள் விளம்பரப்படுத்தப்படும் பொழுது வயது எவ்வாறிருப்பினும் விண்ணப்பிப்பதற்குத் தகுதியுடையவராவர்.

8. வேண்டற்பால ஏனையவை.—(1) உள்ளூராட்சித் தாபனமொன்றில் கடமையாற்றுபவர்கள் விண்ணப்பங்கள், அவர்கள் கடமையாற்றும் உள்ளூராட்சித் தாபனத்தின் மாநகரசபை ஆணையாளர் அல்லது தலைவர் மூலமாக அனுப்பப்படுதல் வேண்டும்.

(2) அரசாங்க சேவையில் இருக்கும் உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அவ்வப்பகுதிகளின் தலைவர்கள் மூலமாக அனுப்பப்படுதல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தர பதவிகளை வகிக்கும் உத்தியோகத்தர்களுடைய விண்ணப்பங்கள் விடயத்தில், விண்ணப்பகாரர் தெரிவு செய்யப்படின் அவரை விடுதற்குத் தாம் தயாரா? இல்லையா? என்பதைத் சம்பந்தப்பட்ட பகுதியின் தலைவர் விண்ணப்பத்தை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

(3) குறிக்கப்படும் ஒரு நேரத்திலும் இடத்திலும், நேர்முகப் பரீட்சைக்கோ, பரீட்சைக்கோ தோற்றுமாறு அபேட்சகர்கள் வேண்டப்படலாம். இதன் பொருட்டு பிரயாணச் செலவுகளோ வேறு செலவுகளோ கொடுக்கப்படமாட்டாது.

(4) அபேட்சகர் ஒருவரைச் சிபார்சு செய்ய விரும்பும் எவரும் ஒரு குணச்சான்றிதழைக் கொடுப்பதன் மூலம் அதனைச் செய்யலாம். அபேட்சகர் ஒருவருக்குச் சாதகமாக நேர்முகமாகவேனும் மறைமுகமாகவேனும் எவ்விதமான ஆதரவும் தேடுதலேனும் அபேட்சகர்கள் தேர்ந்தெடுப்பதற்கு எந்தவிதமான முயற்சியும் செய்தலேனும் அவ்வபேட்சகர்களுக்குத் தகைமையின்மையை உண்டாக்கும்.

(5) விண்ணப்பத்தில் உள்ள கூற்றெதுவும் செம்மையற்றதென்று தெரிவிற்கு முன்னர் காணப்படின் விண்ணப்பதாரருக்கு தகைமையீனத்தை உண்டாக்கும்; தெரிவிற்குப் பின்னர் காணப்படின் அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்குப் பாத்திரராவர்.

(6) இவ்விளம்பரத்தில் வேண்டப்படுவனவற்றுக்கு சகல வகைகளிலும் இணக்கமாயில்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(7) "கீழே இணைக்கப்பட்ட படிவத்தில்" விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு உள்ளூர் ஆட்சிச் சேவை அதிகாரசபை செயலாளருக்கு முகவரி இடப்பட வேண்டும். நேரடியாக அவருடைய பெயருக்கு அவை அனுப்பக்கூடாது.

(8) முடிவுத் திகதிக்குப் பின்னர் இக்கந்தோரில் பெற்றுக்கொள்ளப்படும் விண்ணப்பங்கள் சாதாரணமாக ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. விண்ணப்பம் தபாலிற், காணமற்போய்விட்டதோ அல்லது தாமதமாகி விட்டதோ என்ற குற்றச்சாட்டுக்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. கடைசி நாட்கள் வரை தமது விண்ணப்பங்களை அனுப்பாமல் வைத்திருக்கும் பரீட்சார்த்திகள் தாமாகவே விளைவைத் தேடிக்கொள்கின்றனர்.

**வேறுவிதம் கூறப்பட்டாலன்றி உபயோகிக்கப்பட வேண்டிய விண்ணப்ப மாதிரிப் பத்திரம்**

உள்ளூராட்சிச் சேவை

முக்கியமாகக் கவனிக்க.—விண்ணப்பத்தைக் கீழே விதித்துள்ள முறையில் எழுதி பதவி பற்றிய வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலிற் சொல்லப்படும் விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளுவதற்கான கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் செயலாளர்,

உள்ளூராட்சிச் சேவை அதிகாரசபை, தபாற் பெட்டி 530, கொழும்பு என்ற விலாசத்தை அடையும் வண்ணம் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பத்தை செயலாளரின் பெயருக்கு விலாசமிட்டு அனுப்பலாகாது.

(2) விண்ணப்பகாரர் தமது விண்ணப்பங்களை, தயார் செய்யுமுன்னர் மேற்கூறிய பொது நிபந்தனைகளையும் வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலின் வேண்டுதலையும் கவனமாக வாசித்து விண்ணப்பிப்பதற்குத் தாங்கள் சகல வகைகளிலும் அருகதையுடையவர்கள்தான் என்பதை நிச்சயப்படுத்திக் கொள்ள வேண்டுமென்று ஆலோசனை கூறப்படுகின்றனர். விண்ணப்பகாரர் வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலை உசாவி, உரிய சகல தகவல்களையும் தவறாது கொடுக்கவேண்டும்.

(3) விண்ணப்பகாரர் கீழ்க்காணும் சாதனங்களின் பிரதிகளை அவர்களின் விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டும்.—(1) ஆங்கிலத்தில்/சிங்களத்தில்/தமிழில் சித்தியெய்திய ஆக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ், (2) குணச் சான்றிதழ், (3) பதவி அத்தகைய தன்மையதாயின் உயர் தொழில்/தொழில்நுட்பத் தகைமைகளின் சான்றிதழ்.

(4) விண்ணப்பகாரர் மேற்கூறிய பொது நிபந்தனைகளின் 8 ஆம் பந்தியை விசேடமாகக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறார்கள்.

...............(...............) பதவிக்கான விண்ணப்பம்

1. (அ) வெற்றுப் பதவி விளம்பரப்படுத்தப்பட்டுள்ள வர்த்தமானப் பத்திரிகையின் திகதி :————.

(ஆ) ..............................பதவிக்கான விண்ணப்பம்.

2. முழுப் பெயர் (தனித்தனி எழுத்துக்களில்) :————.

தேசிய இனம் :————.

(மேலேயுள்ள 5 ஆம் நிபந்தனையில் கூறப்பட்டுள்ள வரைவிலக்கணத்தின்படி இலங்கையரா? இலங்கையரல்லாதவரா? என்பதைக் கூறுக. நீர் பதிவு மூலம் இலங்கைப் பிரசையாயிருப்பின் பிரசாவுரிமைச் சான்றிதழின் சார்பு எண்ணையும் திகதியையும் கூறுக.)

3. தபால் விலாசம் :————.

(விலாசமாற்றமெதுவும் உடனே அறிவிக்கப்பட வேண்டும்.)

4. (அ) விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளுவதற்கான கடைசித் திகதியில் சரியான வயது

————வருடங்கள். ————மாதங்கள். ———— நாட்கள்.

(ஆ) பிறந்த திகதி :

வருடம்.————. மாதம்.————. திகதி.————.

5. பிறந்த இடம் :—

(அ) விண்ணப்பகாரர் :————.

(ஆ) அவரது பிதா :————.

(இ) அவரது பிதாவழிப் பேரன் :————.

(ஈ) அவரது பிதாவழிப் பாட்டன் :————.

(விண்ணப்பகாரர் இலங்கையில் பிறந்தவராயின் (அ) வுடன் ஒன்றில் (ஆ) வை அல்லது (இ) வையும் (ஈ) வையும் நிரப்புதல் வேண்டும். விண்ணப்பகாரர் இலங்கையில் பிறவாதவராயின் (அ) வோடு ஒன்றில் (ஆ) வையும் (இ) வையும் அல்லது (இ) வையும் (ஈ) வையும் நிரப்புதல் வேண்டும்).

6. விவாகமானவரா? தனியாளரா? அல்லது தாரமிழந்தவரா? கைம்பெண்ணா? :————.

7. 12 வயது தொடக்கம் படித்த பாடசாலைகளும், கல்லூரிகளும் மற்றும் தாபனங்களும் :—

| பொதுக் கல்வி | | | உயர் தொழில்/தொழில் நுட்பக் கல்வி | | |
|---|---|---|---|---|---|
| பாடசாலை அல்லது கல்லூரி | சேர்ந்த திகதி | விட்ட திகதி | தாபனம் | சேர்ந்த திகதி | விட்ட திகதி |
| 1............ | ........ | ...... | 1............ | ........ | ........ |
| 2............ | ........ | ...... | 2............ | ........ | ........ |
| 3............ | ........ | ...... | 3............ | ........ | ........ |
| 4............ | ........ | ...... | 4............ | ........ | ........ |
| 5............ | ........ | ...... | 5............ | ........ | ........ |

8. கல்வித் தகைமைகள் :—

(அ) சி. பா. த. பத்திரம்/க. பொ. த. ப. (சாதாரண தரம்)

| | பரீட்சையில் சித்தியடைந்த வருடம் | சுட்டிலக்கம் | பாடங்கள் | திறமைச் சித்தி | விசே-சித்தி |
|---|---|---|---|---|---|
| முதல்தடவை | | | | | |
| இரண்டாம் தடவை | | | | | |

(ஆ) க. பொ. த. ப. (உயர்தரம்)

| | பரீட்சையில் சித்தியடைந்த வருடம் | சுட்டிலக்கம் | பாடங்கள் | திறமைச் சித்தி | விசேட சித்தி |
|---|---|---|---|---|---|
| | | | | | |

(இ) வேறு கல்வித் தகைமைகள் :—

| பரீட்சையின் பெயர் | பரீட்சையில் சித்தியடைந்த வருடம் | சுட்டிலக்கம் | பாடங்கள் |
|---|---|---|---|
| | | | |

(ஈ) கீழ் உள்ளவற்றில் சித்தியடைந்த ஆகக்கூடிய பரீட்சை :—

1. சிங்களம் :————.
2. தமிழ் :————.
3. ஆங்கிலம் :————.

9. பெற்றுள்ள ஏதும் உயர் தொழில் அல்லது தொழில் நுட்ப அல்லது இருவகைத் தகைமைகளையும் திகதிகளுடனும் தாபனங்களின் பெயர்களுடனும் தருக :————.

10. உயர்தொழில்/தொழில்நுட்ப/அனுபவங்கள் :—

| தாபனத்தின் பெயர் | தொழிற் பயிற்சி வழங்கப்பட்ட பதவியின் தன்மை | சேர்ந்த திகதி | விட்ட திகதி |
|---|---|---|---|
| | | | |

(சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படவேண்டும்)

11. (அ) பாடசாலையை விட்டபின்னர் வகித்த உத்தியோகம் (வகித்த பதவிகளை அவற்றில் சேர்ந்த, அவற்றை விட்ட திகதிகளுடன் தருக) :—

(ஆ) நிரந்தரமாகவேனும் தற்காலிகமாகவேனும் அரசாங்கத்திலாவது உள்ளூராட்சித் தாபனத்திலாவது உத்தியோகத்திலிருந்து அந்த உத்தியோகம் எச்சமயத்திலேனும் நிறுத்தப்பட்டிருப்பின், சேவை நிறுத்தப்பட்டமைக்கான காரணத்தை திகதிகளுடன் விபரமாக விளக்குக :————.

(இ) உள்ளூராட்சிச் சபைகளில் பார்த்த உத்தியோக விவரம் (பதவி, உள்ளூராட்சித் தாபனம், காலம்) :————

(ஈ) தற்போதைய உத்தியோகம் பற்றிய பின்வரும் விபரங்களைக் கூறுக :—

(1) உத்தியோகப் பதவிப் பெயரும் அதன் தரமும் அதில் நியமிக்கப்பட்ட திகதியும் :————.

(2) தற்போதைய சம்பளமும் (படிகள் நீங்கலாக) சம்பள அளவுத் திட்டமும் :————.

(3) இளைப்பாற்றுச் சம்பளமுண்டா ? :————.

(உ) முன்னைநாட் போர்வீராயின் இருந்த படைப் பிரிவு, வரிசைப் பதவி ஆகியவற்றின் விபரங்களும் சேர்ந்த, விடுபட்ட திகதிகளும் :————.

12. இம்மொழிகளில் வாசிக்கும், எழுதும், பேசும் தேர்ச்சியுண்டா ? :—

(அ) சிங்களம் :————.

(ஆ) தமிழ் :————.

13. விசேட தகைமைகள்.—விளம்பரத்தில் குறிப்பிடப்பட்ட விசேட தகைமைகள் அல்லது அனுபவம் இவை இரண்டும் உமக்குண்டா ? உண்டெனில், அவற்றின் முழு விபரங்களையும் திகதிகளுடன் தருக :————.

14. ஒரு நீதிமன்றத்தில் ஏதும் கிறிமினல் குற்றத்தின் பொருட்டு தண்டிக்கப்பட்டதுண்டா ? உண்டெனில், அவ்வழக்கின் திகதியையும் இலக்கத்தையும் குற்றத் தீர்ப்பின் தன்மையையும் தருக :————.

15. கடன் தொல்லையில்லாதிருக்கின்றீரா ? இல்லையாயின் எவ்வளவுக்குக் கடனாளியாக இருக்கின்றீர் ? :————.

16. வேறு ஏதும் விபரங்கள் (விசேட உரிமைக் கோரிக்கைகள் ஆதியன) :————.

17. யார் யாரிடமிருந்து குணச் சான்றிதழ்கள் பெறப்பட்டிருக்கின்றனவோ அவர்களின் பெயர்களும் உத்தியோகப் பதவிப் பெயர்களும் (அச்சான்றிதழ்களின் மூலப்பிரதிகளை இணைக்காது நகல் பிரதிகளையே இணைத்தல் வேண்டும். அட்டவணைப்படுத்தப்பட்ட பதவிகளை வகிக்கும் உள்ளூராட்சிச் சேவை அங்கத்தவர்கள் இந்த வேண்டுதலை நிறைவேற்றவேண்டியதில்லை) :————.

விண்ணப்பத்தில் நான் தந்துள்ள விபரங்கள் உண்மையானவையென்றும் செம்மையானவையென்றும் நான் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். இதிலடங்கியுள்ள விபரங்களெதுவும் பொய்யானவை அல்லது செம்மையில்லாதவை எனக் காணின், தெரிவுக்கு முன்னர் தகைமை நீக்கத்துக்கும், நியமனத்துக்குப் பின்னர் அச் செம்மையின்மை கண்டுபிடிக்கப்படின், எனக்கு நட்டஈடு எதுவுமின்றி வேலை நீக்கத்துக்கும் நான் பாத்திரமாவேன் என்பதையும் நான் அறிவேன்.

————,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

திகதி :————.
செயலாளர் அவர்கட்கு,
உள்ளூராட்சிச் சேவை அதிகார சபை,
தபால் பெட்டி 530, கொழும்பு 1.

---

### உள்ளூராட்சிச் சேவை ஓவசியர்கள் பதவிகள்

கீழ்க்காணும் தகைமைகளையுடைய இலங்கைக் குடிமக்களிடமிருந்து, மேற்படி பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் யாவும், இவ்வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளுடன் இணைக்கப்பட்டிருக்கும் விண்ணப்பப் படிவத்தில் கண்டவாறு செய்யப்பட்டு 28.02.1975 திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ பதிவுத் தபாலில் எம்மையடையுமாறு அனுப்பப்பட வேண்டும்.

2. **வேதனக் கிரமம்.**—இப்பதவிக்குரிய திரட்டிய வேதனம் வருமாறு வருடாந்தம் ரூபா 3,000—90×11—3,990 வருடாந்தம் ரூபா 3,450 பெறுமுன் வினைத்திறமைகாண் தடையுண்டு.

3. **வயதெல்லை.**—15.01.75 திகதியன்று 18 வருடங்களுக்குக் குறையாமலும் 30 வருடங்களுக்கு மேற்படாமலுமிருத்தல் வேண்டும். இந்த வயதெல்லை உள்ளூராட்சி மன்றங்களில் நிரந்தரப் பதவிகளை வகிப்பவர்களுக்குப் பொருந்த மாட்டாது. ஆனால் அவர்கள் மற்றெல்லா வகைகளிலும் தகைமையுடையவர்களாக இருத்தல் வேண்டும்.

4. **கல்வியும் வேண்டிய மற்றைய தகைமைகளும் :—**

4 : 1 வருமான, வேலைகள் ஓவசியர்கள் பதவிகள்.

4 : 1 : 1 விண்ணப்பதாரர்கள் க. பொ. த. ப. (சா/த) பரீட்சையில் 5 திறமைச் சித்திகளுடன் சித்தியடைந்திருத்தல் வேண்டும். இவற்றில் ஒரு திறமைச் சித்தி கணிதத்தில் (எண் கணிதமல்ல) பெற்றிருத்தல் வேண்டும். (குறைந்தது 6 பாடங்களில் வேண்டப்பட்ட திறமைச் சித்திகளையும், சித்திகளையும் இரண்டு தடவைகளில் பெற்றிருக்கலாம்). அல்லது,

4 : 1 : 2 விண்ணப்பதாரர்கள், க. பொ. த. ப. (சா/த) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாது கணிதம், சிங்களம் அல்லது தமிழ் உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அத்துடன் கீழ்க்காணும் இரண்டு தகைமைகளில் ஒன்றைப் பெற்றிருத்தல் வேண்டும்.

4 : 1 : 3 ஒரு அரசாங்க தொழிநுட்ப நிறுவனத்தில் பொறியியல் விஞ்ஞானத்தில், ஆரம்ப பரீட்சையில் ஒரு சித்தியைப் பெற்றிருத்தல் வேண்டும். அல்லது,

4 : 1 : 4 சிறிய நிர்மாண வேலைகள், கணியம் எடுத்தல், தாரிடுதல், கல் பரப்பிச் செப்பனிடுதல் முதலியவற்றில் இரண்டு வருட அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும். (இது தொடர்பான அனுபவத்தை ஒரு அரசாங்க, அல்லது உள்ளூராட்சி நிறுவனத்தில் அல்லது ஒரு நன்கு மதிக்கப்பட்ட நிறுவனத்தில் பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் அனுபவத்திற்கான சான்றிதழ் இணைக்கப்பட வேண்டும்).

4 : 2 நீர் வேலைகள் ஓவசியர்கள் பதவிகள் :

4 : 2 : 1 விண்ணப்பதாரர்கள் க. பொ. த. ப. (சா./த.) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாது 5 பாடங்களில் திறமைச் சித்தியுடன் சிங்களம் அல்லது தமிழ் உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அத்துடன்,

4 : 2 : 2 விண்ணப்பதாரர்கள், ஒரு அரசாங்க அல்லது உள்ளூராட்சி நிறுவனத்தில் அல்லது ஒரு நன்கு மதிக்கப்பட்ட நிறுவனத்தில் நீர்க் குழாய்களை இடுவதிலும், பேணுவதிலும் நீர் வழங்கல் திட்டங்கள் பற்றியும் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும். (அத்துடன் அனுபவத்திற்கான சான்றிதழ் இணைக்கப்பட வேண்டும்.) அல்லது,

4 : 2 : 3 விண்ணப்பதாரர்கள் சிங்களம் அல்லது தமிழ் பாடத்துடன் இரண்டு தடவைகளுக்கு மேற்படாது 6 பாடங்களில் க. பொ. த. ப. (சா./த.) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அத்துடன்,

4 : 2 : 4 ஒரு அரசாங்க நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட ஒரு குழாயொட்டல் சான்றிதழை உடையவர்களாயிருத்தல் வேண்டும்.

5. **சேவை நிபந்தனைகளும் விதிகளும்.**—இப்பதவி நிரந்தரமானது. நியமனஞ் செய்யப்பட்ட பரீட்சார்த்திகள் சகாய நிதிக்குக் கட்டுப்பணம் செலுத்த வேண்டும்.

6. வருமான, வேலைகள் ஓவசியர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பரீட்சார்த்திகள், வேண்டப்படும் சமயங்களில் வருமான வேலைகளையோ, சுகாதார வேலைகளையோ, தமது கடமைகளுடன் மேற்படச் செய்வதற்கும் கடப்பாடுடையவர்களாவார்கள்.

7. இந்த அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையின் ஆரம்பத்தில் வெளியிடப்பட்டிருக்கும் உள்ளூர் ஆட்சிச் சேவைப் பகுதிகளுக்குரிய நியமனங்கள் சம்பந்தமான பொது நிபந்தனைகளைப் பார்க்கவும்.

8. உள்ளூராட்சிச் சேவை பணிப்பாளருக்கு விண்ணப்பங்களையோ அல்லது சான்றிதழ்களின் பிரதிகளையோ விலாசமிட வேண்டுமேயன்றி, இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்கோ நேர்முகமாய் அனுப்பக்கூடாது.

9. அரசாங்க சேவையிலோ அல்லது உள்ளூராட்சிச் சேவையிலோ வேலை பார்க்கும் உத்தியோகத்தரிடமிருந்து வரும் விண்ணப்பப் பத்திரங்கள் குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் இக்கந்தோருக்கு வந்தால் அவ்வுத்தியோகத்தர்கள் குறிப்பிட்ட திகதிக்கு முன்னர் தமது விண்ணப்பங்களைப் பகுதித் தலைவர் அல்லது மாநகரசபை ஆணையாளர், உள்ளூராட்சி மன்றத் தலைவர் ஆகியோர் தாமதத்திற்குரிய உறுதியான காரணங்களைக் காட்டி, விண்ணப்பப் பத்திரங்களை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று சிபாரிசு செய்து சான்றுரைத்தாலன்றி அவ்வுத்தியோகத்தர்களின் விண்ணப்பப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

10. தகுதியுடைய விண்ணப்பதாரர்களுக்கு மாத்திரம் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்படும்.

ஆர். அபேரத்ன,
உ. ஆ. சே. பணிப்பாளர்.

உள்ளூராட்சிச் சேவைத் திணைக்களம்,
த. பெ. 530,
கொழும்பு 1,
1975 ம் ஆண்டு சனவரி மீ 15 ந் உ.

2-124—07.02.75 ந் திகதிய வர்த்தமானி இல. 150

# துணை விதிகள்

### கிராமச்சபைகள் கட்டளைச்சட்டம்

(257 ஆம் அத்தியாயமான) கிராமச்சபைகள் கட்டளைச் சட்டத்தின் 42 ஆம் பிரிவின்கீழ் கண்டி மாவட்டத்திலுள்ள உடுநுவர கங்கபலாத்தை வடக்குக் கிராமப் பிரதேசத்துக் கிராமச்சபையால் ஆக்கப்பட்டு அப்பிரிவின் (3) என்னும் பிரிவினால் தமக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக்கொண்டு அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதி.

டீ. இராசேந்திரா,
மேலதிகச் செயலாளர்,
அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள் நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1975 ம் ஜனவரி மீ 21 ந் உ

#### துணைவிதி

நீர் வழங்கல் சேவை சம்பந்தமாக கண்டி மாவட்டத்திலுள்ள உடுநுவர கங்கபலாத்தை வடக்குக் கிராமச்சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, 15.9.1967 ன் 14,766 ம் இலக்க இலங்கை அரசாங்க கசெற்றின் IV ஆம் பாகத்தில் பிரசுரிக்கப்பட்ட நியமத்துணைவிதிகளின் VIII ஆம் பாகத்திலுள்ள துணைவிதிகள், அவை சபைக்கு ஏற்புடையதாக இருக்கும்வரை, 27 ஆம் துணைவிதியின் (2) என்னும் உபபந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றன.

#### நீர் வழங்கலுக்கான கட்டணங்கள்

27 (3) (1) (அ) வீட்டுக் கருமங்களுக்கான நீர்மானி வாயிலாக அல்லது வேறு விதத்தில் வழங்கப்படலாம்.

(ஆ) வீட்டுக் கருமங்களுக்காக மானி வாயிலாக நீர் வழங்கப்படுமிடத்து, நீர் வழங்கலுக்காகப் பின்வரும் விகிதங்களில் கணக்கிடப்படும் கட்டணங்கள் சம்பந்தப்பட்ட மனைத்தலத்தின் உடைமையாளரினால் அல்லது குடியிருப்பாளரினால் சபைக்கு மாதாந்தம் செலுத்தப்படவேண்டும்.

ஒரு மாதத்தில் வழங்கப்பட்ட முதல் 1,000 கலன்களுக்கு .. கட்டணமில்லை

முதல் 1,000 கலன்களுக்கு மேலதிகமாக வழங்கப்பட்ட ஒவ்வொரு 1,000 கலன்களுக்கும் .. .. 1 50

(இ) வீட்டுக் கருமங்களுக்காக மானிவாயிலாக அன்றி வேறு விதத்தில் நீர் வழங்கப்படுமிடத்துப் பின்வரும் கட்டணங்கள் சபைக்கு மாதாந்தம் செலுத்தப்படல் வேண்டும் :

(i) முதலல் ½ அங்குல குழாய் வாயலுக்கு மாதமொன்றுக்கு .. .. .. 4 0

(ii) மேலதிக குழாய் வாயல் ஒவ்வொன்றுக்கும் .. 1 0

2. (அ) வீட்டுக் கருமங்கள் தவிர்ந்த வேறுகருமங்களுக்கான நீர் மானி வாயிலாக அல்லது வேறு விதத்தில் வழங்கப்படலாம் ;

(ஆ) வீட்டுக் கருமங்கள் தவிர்ந்த வேறு கருமங்களுக்கு நீர் வழங்கப்படுமிடத்துப் பின்வரும் கட்டணங்கள் சபைக்கு செலுத்தப்படல் வேண்டும். :

(i) மானி பொருத்தப்பட்டிருக்குமிடத்து ஒவ்வொரு 1,000 கலன்களுக்கும் மாதமொன்றுக்கு .. 2 50

(ii) மானி பொருத்தப்பட்டிருக்காதவிடத்து முதல் ½ அங்குல குழாய் வாயிலுக்கு மாதமொன்துக்கு 12 0

மேலதிக குழாய் வாயில் ஒவ்வொன்றுக்கும் .. 4 0

(iii) மானிகளின் உபயோகத்துக்கான கட்டணங்கள்—

½ அங்குல மானிக்கு .. .. 4 0

¾ அங்குல மானிக்கு .. .. 8 0

3. (அ) பொது நிறுவனமொன்றுக்கான நீர் மானிவாயிலாக அல்லது வேறு விதத்தில் வழங்கப்படலாம் ;

(ஆ) அவ்வாறு வழங்கப்படும் நீருக்குப் பின்வரும் கட்டணங்கள் சபைக்கு மாதாந்தம் செலுத்தப்படல் வேண்டும்—

ரூ. ச.

(i) மானி வாயிலாக நீர் வழங்கப்படுமிடத்து ஒவ்வொரு 1,000 கலன்களுக்கும் .. .. 1 50

(ii) மானி வாயிலாகவன்றி வேறுவிதத்தில் நீர் வழங்கப்படுமிடத்து, முதலாவது குழாய்வாயிலுக்கு .. 7 50

மேலதிக குழாய்வாயில் ஒவ்வொன்றுக்கும் .. 2 50

#### பொதுக்கட்டணங்கள்

4. மதிப்பீட்டு வீதவரிகள் எதுவும் அறவிடப்படாத ஒவ்வொரு ஆதனம் சம்பந்தமாகவும், மேலே குறிப்பிடப்பட்டுள்ள கட்டணங்களுடன் ஒவ்வொரு காலாண்டுக்கும் 1 ரூபா 50 சத விதமான தண்ணீர் வரியொன்று செலுத்தப்படுதல் வேண்டும்.

2-43—07.02.75 ந் திகதிய வர்த்தமானி இல. 150

---

### மஹரகமைப் பட்டின சபை

#### பட்டினசபைகள் கட்டளைச்சட்டம்

(256 ஆம் அத்தியாயமான) பட்டின சபைகள் கட்டளைச் சட்டத்தின் 152, 156 ஆகிய பிரிவுகளின் கீழ் மஹரகமைப் பட்டினசபையினால் ஆக்கப்பட்டு அக்கட்டளைச்சட்டத்தின் 153 ஆம் பிரிவினால் தமக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி உள்நாட்டலுவல்கள் அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதி.

டி. இராசேந்திரா,
கேலதிகச் செயலாளர்,
அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

1975 ம் ஆண்டு ஜனவரி மீ 22 ந் உ.

#### துணைவிதி

1. இதனோடுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விகிதங்களுக்கிணங்கத் தீர்மானிக்கப்படும் கட்டணமொன்று புதிய கட்டடங்களுக்காக அல்லது தற்போதுள்ள கட்டடங்களில் மாற்றங்கள் செய்வதற்காக (268 ம் அத்தியாயமான) வீடமைப்பு, நகரச் சீர்திருத்தக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் சமர்ப்பிக்கப்படும் வரைவுப்படங்களைப் பரிசோதனை செய்து பரிசீலனை செய்வது சம்பந்தமாகச் செலுத்தப்படல் வேண்டும்.

2. (i) துணைவிதி 1 இன் கீழ்ச் செலுத்தப்படற்பாலதான கட்டணத் தொகை மஹரகமைப் பட்டினசபைத் தலைவரி மிருந்து கோரிக்கையொன்று கிடைக்கப்பெற்ற திகதியிலிருந்து ஏழு நாட்களுக்குள், அங்கீகாரத்துக்காக அல்லது சம்மதத்துக்காக விண்ணப்பஞ் செய்யும் நபரினால் செலுத்தப்படல் வேண்டும் ;

(ii) இத்துணைவிதியின் முற்போந்த பந்தியில் விதிக்கப்பட்டுள்ள காலத்துக்குள் அத்தகைய கட்டணத்தைச் செலுத்தத் தவறும் ஒவ்வொருவரும் ஒரு தவறைப் புரிந்தவராவதுடன் குற்றத்தீர்ப்பின் பேரில் ஐம்பது ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.

?. 1 ஆம் துணைவிதியின் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணம் செலுத்தப்படும்வரை வரைவுப்படம் எதுவும் பரிசோதிக்கப்பட்டு பரிசீலனை செய்யப்படலாகாது.

#### அட்டவணை

1. புதிய கட்டடங்களுக்கான அல்லது மேலதிக நிலப்பரப்பு சம்பந்தப்பட்ட தற்போதுள்ள கட்டடங்களில் உள்ள மாற்றங்களுக்கான வரைவுப் படங்கள் :—

ரூ. ச.

(அ) மொத்த நிலப்பரப்பு 600 சதுர அடிக்கு மேற்படாதவிடத்து .. .. .. கட்டணமில்லை

(ஆ) மொத்த நிலப்பரப்பு 600 சதுர அடிக்கு மேற்பட்டு ஆனால் 1,000 துர அடிக்கு மேற்படாதவிடத்து .. 10 0

(இ) மொத்த நிலப்பரப்பு 1,000 சதுர அடிக்கு மேற்பட்டு ஆனால் 2,000 துர அடிக்கு மேற்படாதவிடத்து .. 25 0

(ஈ) மொத்த நிலப்பரப்பு 2,000 சதுர அடிக்கு மேற்படுவிடத்து .. .. .. 35 0

2. மேலதிக நிலப்பரப்பு சம்பந்தப்பட்ட தற்போதுள்ள கட்டடங்களில் மாற்றங்கள் செய்வதற்கான வரைவுப்படங்களுக்கு தற்போதுள்ள நிலப்பரப்பு 600 சதுர அடிக்கு மேற்படுமிடத்து .. 10 0

இந்த அட்டவணையில் " நிலப்பரப்பு " என்பது கீழ்த்தளத்தில் அல்லது வேறெந்த மாடியிலுமுள்ள இடம் எனப் பொருள்படும்.

2-55—07.02.75 ந் திகதிய வர்த்தமானி இல. 150

### பண்டத்தரிப்புப் பட்டினம்

பட்டினசபைகள் கட்டளைச் சட்டம்

**(256 ஆம் அத்தியாயமான) பட்டினசபைகள் கட்டளைச்சட்டத்தின் 152, 156 ஆகிய பிரிவுகளின் கீழ் பண்டத்தரிப்புப் பட்டினத்தின் விசேட ஆணையாளரால் ஆக்கப்பட்டு அக்கட்டளைச்சட்டத்தின் 153 ஆம் பிரிவினுல் தமக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக்கொண்டு அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட துணை விதி.**

டீ. இராசேந்திரா,
மேலதிகச் செயலாளர்,
அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

**கொழும்பு,**
**1975 ம் ஆண்டு ஜனவரி மீ 22 ந் உ.**

### பொதுச்சந்தை ள் சம்பந்தமான துணைவிதி

பண்டத்தரிப்புப் பட்டின சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள நியமத் துணைவிதிகளின் XV ஆம் பாகத்தின் 1 ஆம் துணைவிதியின் நோக்கத்துக்கு, " சந்தைப் பிரதேசம் " என்பது பண்டத்தரிப்புச் சந்தையிலிருந்து அரை மைல் ஆரையைக் கொண்ட ஒரு வட்டத்தினுள் உள்ளதும் பின்வரும் எல்லைகளினுல் வரையறுக்கப்பட்டுள்ளதுமான பிரசேதமாதல் வேண்டும் :—

வடக்கு : எஸ். முத்தையா, திருமதி சிவபாலன், இரத்தினம், திருமதி புவனேஸ்வரி நாகராஜா, திருமதி வேலுப்பிள்ளை சரஸ்வதி ஆகியோருக்குச் சொந்தமான காணியினுல் ;
கிழக்கு : ஆர். பீ. தம்பையாவுக்குச் சொந்தமான காணியினுலும் தெல்லிப்பளை–கீரிமலை வீதியினுலும் ;
தெற்கு : தெல்லிப்பளை–கீரிமலை வீதியினுல் ;
மேற்கு : ஒழுங்கையினுல்.

**2–60—07.02.75 ந் திகதிய வர்த்தமானி இல. 150**

### புசல்லாவைப் பட்டினம்

பட்டினசபைகள் கட்டளைச்சட்டம்

(256 ஆம் அத்தியாயமான) பட்டினசபைகள் கட்டளைச்சட்டத்தின் 152, 156 ஆகிய பிரிவுகளின்கீழ் புசல்லாவைப் பட்டினத்தின் விசேட ஆணையாளரால் ஆக்கப்பட்டு அக்கட்டளைச்சட்டத்தின் 153 என்னும் பிரிவின்கீழ் அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதிகள்.

டீ. இராசேந்திரா,
மேலதிகச் செயலாளர்,
அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1975 ம் ஆண்டு ஜனவரி மீ 22 ந் உ.

### துணைவிதிகள்

இத்துணைவிதிகள் 1975 ஆம் ஆண்டின் புசல்லாவைப்பட்டின (விளம்பர) த் துணைவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. விசேட ஆணையாளரால் அதன்சார்பில் வழங்கப்பட்ட ஓர் அனுமதிப் பத்திரத்தின் அதிகாரத்தின் பேரிலன்றி தெரு, வீதி, வாய்க்கால் எதிலுமிருந்து பார்க்கக்கூடியவண்ணம் விளம்பரம் எதனையும் எவரும் வெளிக்காட்டல் அல்லது வெளிக்காட்டுவித்தல் ஆகாது.

ஆயின், எவ்வாறுயினும், இத்துணைவிதியின் முற்போந்த ஏற்பாடுகள் பின்வரும் விளம்பரங்கள் எதற்கும், அத்தகைய விளப்பரம் ஒளியலங்கார விளம்பரமாக அல்லது வான் அடையாளமாக இருந்தாலன்றி ஏற்புடையனவாகா :

(அ) மேலும் வருமானங்களை ஒரு தரும நோக்கத்திற்காக உபயோகிப்பதற்கான ஒரு களியாட்டம் பற்றிய விளம்பரம் :

(ஆ) களியாட்டம் நடைபெறவிருக்கும் இடத்திலேயே பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கும் ஏதேனும் களியாட்டம் பற்றிய ஒரு விளம்பரம் ;

(இ) அரசாங்கத்தால் பார்வைக்கு வைக்கப்பட்ட ஒரு விளம்பரம் ;

(ஈ) ஏதேனும் சமய, அரசியல், அல்லது வேறு பொதுக்கூட்டம் சம்பந்தமான விளம்பரம் ;

(உ) எக்கட்டடத்தினதும் சாரளத்திலிருக்கும் ஒரு விளம்பரம் ;

(ஊ) " வாடகைக்கு " என்னும் ஒரு விளம்பரம் ;

(எ) " விற்பனைக்கு " என்னும் ஒரு விளம்பரம் ;

(ஏ) வீட்டுக்குரிய ஒரு பெயர்த்தகடு ;

(ஐ) தொழில் நோக்கங்களுக்காக உபயோகிக்கப்படும் ஒரு சதுர அடிக்கு மேற்படாத பரப்புடைய ஒரு பெயர்த்தகடு.

(ஒ) வியாபார நோக்கங்களுக்காக உபயோகிக்கப்படும் ஒரு வாகனத்தில் அவ்வாகனச் சொந்தக்காரரின் பெயரையும் முகவரியையும் காட்டும் ஒரு விளம்பரம்.

(ஓ) ஒரு வளவில் நடத்தப்படும் ஒரு தொழிலை அல்லது வியாபாரத்தைப்பற்றி அவ்விடத்தில் வைக்கப்பட்டிருக்கும் ஒரு விளம்பரம்.

3. (1) எந்த விளம்பளரத்தையேனும் வெளிக்காட்டுவதற்குரிய அனுமதிப்பத்திரத்துக்கான ஒவ்வொரு விண்ணப்பமும், அத்தகைய விளம்பரத்தை வெளிக்காட்டுவதற்குக் கருதியுள்ள திகதிக்குக் குறைந்தது ஏழு நாட்களுக்கு முன்னர் விசேட ஆணையாளருக்கு அனுப்பப்படல் வேண்டும்.

ஆயின், எவ்வாறுயினும், விசேட சூழ்நிலைகளில் இப்பந்தியின் முற்போந்த ஏற்பாடுகளில் குறிப்பிடப்பட்டுள்ளகால எல்லைக்குள் செய்யப்படாத விண்ணப்பங்களையும் விசேட ஆணையாளர் ஏற்றுக்கொள்ளலாம்.

(2) ஓராம்பந்தியில் குறிப்பிடப்பட்ட விண்ணப்பம் ஒவ்வொன்றுடனும் விண்ணப்பகாரர் வெளிக்காட்டக்கருதியுள்ள விளம்பரத்தின் படியொன்றை அனுப்புதல் வேண்டும்.

(3) ஓராம் பந்தியில் குறிப்பிடப்பட்ட ஒரு விண்ணப்பத்தை விசேட ஆணையாளர் அங்கீகரிக்குமிடத்து அவ்விளம்பரத்தை வெளிக்காட்டுவதற்கான அனுமதிப்பத்திரத்துக்காக இதனோடுள்ள அட்டவணையில் காட்டப்பட்டிருக்கும் விகிதங்களின்படி கணிக்கப்படும் ஒரு கட்டணத்தைச் செலுத்தும்படி அவர் பணித்தல் வேண்டும். அத்தகைய கட்டணத்தைச் செலுத்தும்வரை அனுமதிப்பத்திரம் வழங்கப்படலாகாது.

4. (1) ஒரு விளம்பரத்தை வெளிக்காட்டுவதற்கு எவருக்காயினும் ஓர் அனுமதிப்பத்திரம் வழங்கப்படுமிடத்து விசேட ஆணையாளர் அத்தகையவரை—

(அ) அவ்வனுமதிப்பத்திரத்தின் இலக்கத்தையும் திகதியையும் அத்தகைய அனுமதிப்பத்திரம் தொடர்பிலான அவ்விளம்பரத்தின் ஒவ்வொரு படியிலும் சேர்க்கும்படி ; அல்லது

(ஆ) அனுமதிப்பத்திரத்துக்கான கட்டணம் செலுத்தப்பட்டதற்கு அடையாளமாக முத்திரையிடுவதற்கான நோக்கத்துக்காக விளம்பரத்தின் ஒவ்வொரு படியையும் விசேட ஆணையாளர் முன் முன்னிலைப்படுத்தும்படி பணித்தல் வேண்டும்.

(2) இத்துணைவிதியின் (1) ஆம் பந்தியின் கீழ் விசேட ஆணையாளரால் பணிப்புரை அளிக்கப்பட்ட ஒவ்வொருவரும் அத்தகைய பணிப்புரைகளை நிறைவேற்றுதல் வேண்டும்.

5. எவரேனும்—

(அ) ஒரு விளம்பரத்தை, அவ்விளம்பரம் விசேட ஆணையாளரால் அங்கீகரிக்கப்பட்ட முறையில் கட்டப்பட்ட அல்லது எழுதப்பட்ட ஒரு முன்னீண்ட அடையாளமாக இருந்தாலன்றி, கட்டடக் கோட்டிலிருந்து தளப்பாங்காக அளக்கையில் வீதி அல்லது தெரு எதனுள்ளும் ஆறு ஆங்குலத்துக்கு அதிகமான தூரத்துக்கு நீண்டிருக்கும் அத்தகைய முறையில் ஒரு விளம்பரத்தை வெளிக்காட்டுவிக்கவோ ;

(ஆ) கட்டடமொன்று இல்லாத ஓர் இடத்தில் அத்தகைய விளம்பரம் வீதியின் மத்தியிலிருந்து இருபத்தைந்து அடி தூரத்திலாவது இருந்தாலன்றி ஒரு விளம்பரத்தை வெளிக்காட்டுவிக்கவோ ;

(இ) நிலத்திலிருந்து அளக்கையில் இருபத்தைந்து அடி உயரத்துக்குக் கூடுதலாக அல்லது ஏதேனும் தெரு அல்லது வீதியினுள் விளம்பரத்தைக் கொண்டு ஏதேனும் விளம்பரப்பலகையில் அத்தகைய விளம்பரத்தை வெளிக்காட்டுவிக்கவோ ;

(ஈ) தெரு அல்லது வீதி எதனோடும் மருவியிருக்கும் கட்டட முகப்பு ஒன்றில் அத்தகைய முகப்பின் எல்லைக்கப்பால் நீளத்தில் நீண்டிருக்கும் அல்லது உயரத்தில் எந்த இடத்திலாவது ஏதேனும் தடைச்சின்னத்தின் அல்லது உயரத்தில் எந்த இடத்திலாவது ஏதேனும் தடைச்சின்னத்தின் அடியிலிருந்து நடைபாதைவரையும் அல்லது நிலத்தின் சராசரி மட்டம் வரையுமுள்ள தூரத்தின் நான்கிலொரு பங்குக்கு அதிகமாக இருக்கத்தக்கதாக அச்சின்னத்தைப் பொருத்திவைக்கவோ தொங்கவிடச் செய்யவோ ; அல்லது

(உ) சபையின் வேலைக்கண்காணிப்பாளரினுல் அங்கீகரிக்கப்படாத முறையில் வான் அடையாளம் எதனையும் கட்டுவிக்கவோ எழுப்புவிக்கவோ ஆகாது.

6. பொதுவழிபாட்டுத்தலம், பொது நந்தவனம் அல்லது மலகூடம் அல்லது ஏதாவது பாலம், விளக்குக் கம்பம் அல்லது தந்தி அல்லது தொலைபேசிக்கம்பம் எதன்மீதும் எவ்விளம்பரத்தையும் எவரும் வெளிக்காட்டலாகாது.

7. (1) விளம்பரம் எதுவும் விசேட ஆணையாளரின் அபிப்பிராயப்படி பார்க்கச் சகிக்காத அல்லது ஆட்சேபிக்கத்தக்க நிலையில் இருக்குமிடத்து, எழுத்திலான அறிவித்தல் மூலமாக, அந்த அறிவித்தலில் குறிப்பிடப்படும் காலத்துக்குள் அந்த விளம்பரத்தை வெளிக்காட்டுவதை நிறுத்தும்படி அவர் அந்த விளம்பரத்தை வெளிக்காட்டுவிக்கும் ஆளுக்குக் கட்டளையிடலாம்.

(2) ஓராம் பந்தியின்கீழ் விசேட ஆணையாளரினால் ஓர் அறிவித்தல் அனுப்பப்படும் ஆளொருவர் அதன்கண் குறிப்பிடப்பட்ட காலத்துக்குள் அவ்வறிவித்தலுக்கு அமைந்தொழுகுதல் வேண்டும்.

8. விளம்பரங்களை வெளிக்காட்டுவதற்காக உபயோகிக்கப்படும் விளம்பரப்பலகை எதனதும் சொந்தக்காரர் அல்லது குத்தகைக்காரர்—

(1) அத்தகைய விளம்பரப்பலகையைச் செம்மையானதும் பாதுகாப்பானதுமான நிலையில் பேணுதல் வேண்டுமென்பதுடன் ;

(2) அந்த விளம்பரப்பலகையின் முன்புறத்தில் துலக்கமான ஒரு இடத்தில் அவரது பெயரையும் முகவரியையும் தெளிவாகவும் எளிதில் வாசிக்கக் கூடியதுமான எழுத்துக்களில் பார்வைக்கு வைத்தல் வேண்டும்.

9. எந்த விளம்பரத்திலும் அத்தகைய விளம்பரத்தைப் பார்வைக்கு வைப்பதற்குரிய அனுமதிப்பத்திரத்துக்கான கட்டணம் செலுத்தியமைக்கு அடையாளமாக விசேட ஆணையாளரால் இடப்பட்டுள்ள அடையாளம், குறி எழுத்து, சொல் அல்லது எண் எதனையும் எவரும் உருவழிக்கவோ உருவழிப்பிக்கவோ கூடாது.

10. ஆளெவரும்—

(அ) விசேட ஆணையாளரால் அங்கீகரிக்கப்பட்ட முறையிலன்றி வேறு முறையில் விளம்பரம் எதனையும் வாகனம் எதிலும் வெளிக்காட்டு வித்தல், அல்லது

(ஆ) பொலிஸ் கண்காணிப்பாளரால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு ஒளியலங்காரஞ் செய்யப்பட்ட விளம்பரத்தைத் தவிர்ந்த ஏனைய ஒளியலங்கார விளம்பரத்தைத் தாங்கிய வாகனமெதையும் எந்தத் தெருவிலேனும் அல்லது வீதியிலேனும் செலுத்துவித்தல் ஆகாது.

11. இத்துணைவிதிகளின் ஏற்பாடுகள் எதனையும் மீறி நடக்கும் எவரும் ஒரு தவறுக்குக் குற்றவாளியாகுதல் வேண்டுமென்பதுடன் குற்றத் தீர்ப்பளிக்கப்படின் பேரில் ஐம்பது ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணம் ஒன்றுக்கும் தொடர்ந்து மீறியவராயிருக்கும் சந்தர்ப்பத்தில் அத்தகைய மீறுதலுக்குக் கவனம் செலுத்தும்படி எழுத்திலான அறிவித்தலொன்று விசேட ஆணையாளரிடமிருந்து சேர்ப்பிக்கப்பட்ட பின்னர் அத்தகைய தவறிழைக்கும் ஒவ்வொரு நாளுக்கும் பத்து ரூபாவுக்கு மேற்படாத மேலதிகக் குற்றப்பணமொன்றுக்கும் ஆளாதல் வேண்டும்.

12. இத்துணைவிதிகளின் சந்தர்ப்பம் வேறு வகையில் தேவைப்படுத்தினாலன்றி—

"விளம்பரம்" என்பது ஏதேனும் காணி, கட்டடம், அமைப்பு எதற்கும் மேல் அல்லது எதனிலும் ஒட்டியிருக்கும் முற்றுகவோ பகுதியாகவோ விளம்பர நோக்கமாக அல்லது விளம்பரப்பாங்காகவுள்ள சொல், எழுத்து, எண், அடையாளம், சுவரொட்டி, பலகை, அறிவித்தல், சின்னம், பிரதிமை அல்லது ஒப்பாக்கம் எதனையும் உட்படுத்தும்.

"விசேட ஆணையாளர்" என்பது புசல்லாவைப்பட்டினத்தின் விசேட ஆணையாளர் எனப் பொருள்படும்.

"விளம்பரப்பலகை" என்பது விளம்பரம் எதனையும் பார்வைக்கு வைப்பதற்காக எழுப்பப்படும் அல்லது உபயோகிக்கப்படும் அமைப்பு, ஆதாரம், கம்பம், பலகை, சுவர், பெட்டி அல்லது வேறு உபாயம் எதுவும் எனப் பொருள்படும். மேலும் "வான்குறி" என்பது வீதி, தெரு, வாய்க்கால் அல்லது ஏரி எதனிலுமுள்ள ஏதாவது ஓர் இடத்திலிருந்து வானத்தைப் பின்னணியாகக்கொண்டு முற்றுகவோ பகுதியாகவோ பார்க்கக்கூடியதாகவுள்ள காணி, கட்டடம் அல்லது வேறு அமைப்பு எதிலும் அல்லது அதற்கு மேலாகவும் உள்ள தூவி, தடி, கம்பம், அல்லது கட்டம் எதனிலும் பொருத்தப்பட்ட அல்லது இணைக்கப்பட்ட விளம்பர நோக்கத்துக்காக உபயோகிக்கப்படும் சொல், எழுத்து, மாதிரி குறி சின்னம் அல்லது ஒப்பாக்கம் எதனையும் குறிப்பதோடு காணி, கட்டடம் அமைப்பு அல்லது வீதி எதிலும் அல்லது எதற்கு மேலேயுள்ள விளம்பர நோக்கமாக முற்றுகவேனும் பகுதியாகவேனும் உபயோகிக்கப்படும் வாயுக்குண்டு, வான்குடை, மிதவை, இழுவண்டி அல்லது அதனை ஒத்த உபாயம் எதனையும் உட்படுத்தும்.

அட்டவணை 7

அனுமதிப்பத்திரத்துக்கான கட்டண விகிதம்

| விளம்பரத்தின் விவரம் | இரு வாரங்களுக்கு ரூ. ச. | ஒரு மாதத்துக்கு ரூ. ச. | ஒரு வருடத்துக்கு ரூ. ச. |
|---|---|---|---|
| 1. ஒரு சுவரில் அல்லது விளம்பரப்பலகையில் பார்வைக்கு வைக்கப்படும் 3 அடி நீளத்துக்கும் 2 அடி அகலத்துக்கும் மேற்படாத (சினிமாப்படக்களியாட்டம் சம்பந்தமான விளம்பரமல்லாத) ஒரு விளம்பரத்தின் ஒவ்வொரு சதுர அடிக்கும் .. .. | 0 15 .. | 0 25 .. | 2 50 |
| 2. ஒரு சுவரில் அல்லது விளம்பரப் பலகையில் பார்வைக்கு வைக்கப்படும் 3 அடி நீளத்துக்கும் 2 அடி அகலத்துக்கும் மேற்பட்ட (சினிமாப் படக்களியாட்டம் சம்பந்தமான விளம்பரமல்லாத) ஒரு விளம்பரத்தின் ஒவ்வொரு சதுர அடிக்கும் .. .. | 0 25 .. | 0 50 .. | 5 0 |
| 3. சினிமாப்படக் களியாட்டம் சம்பந்தமான ஒரு விளம்பரத்தின் ஒவ்வொரு சதுர அடிக்கும் .. .. | 0 50 .. | 1 0 .. | 10 0 |
| 4. எவராலேனும் சுமந்து செல்லப்படும் அல்லது ஒரு நகரும் வாகனத்தில் இணைக்கப்பட்டிருக்கும் ஒரு பலகையில் அல்லது ஆதாரத்தில் பார்வைக்கு வைக்கப்படும் (ஒரு சினிமாப்படக்களியாட்டம் சம்பந்தமான விளம்பர மல்லாத) ஒரு விளம்பரத்துக்கு— | | | |
| (அ) அவ்விளம்பரம் 3 அடி நீளத்துக்கும் 2 அடி அகலத்துக்கும் மேற்படாத விடத்து ஒவ்வொரு சதுர அடிக்கும் | 0 50 .. | 1 0 .. | 10 0 |
| (ஆ) அவ்விளம்பரம் 3 அடி நீளத்துக்கும் 2 அடி அகலத்துக்கும் மேற்படுமிடத்து ஒவ்வொரு சதுர அடிக்கும் | 1 0 .. | 2 0 .. | 20 0 |
| 5. விளம்பரப்பாதாகைகளுக்கு, ஒவ்வொரு மாதத்துக்கும் அல்லது அதன் பகுதிக்கு .. .. | — .. | — .. | 25 0 |

2–64—07.02.75 ந் திகதிய வர்த்தமானி இல. 150

---

## மொனருகலைப் பட்டினம்

பட்டினசபைகள் கட்டளைச் சட்டம் (256 ம் அத்தியாயம்)

(256 ம் அத்தியாயமான) பட்டினசபைகள் கட்டளைச் சட்டத்தின் 152, 156 ஆகிய பிரிவுகளின் கீழ், மொனருகலைப் பட்டின விசேட ஆணையாளரினால் ஆக்கப்பட்டு, அக்கட்டளைச் சட்டத்தின் 153 ம் பிரிவின் கீழ் அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதி.

டீ. இராசேந்திரா,
மேலதிகச் செயலாளர்,
அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு, 22.01.75

### கட்டட வரைவுப் படங்களைப் பரிசோதனை செய்து பரிசீலனை செய்வது சம்பந்தமான துணைவிதிகள்

1. இதனோடுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விகிதங்களுக்கிணங்கத் தீர்மானிக்கப்படும் கட்டணமொன்று புதிய கட்டடங்களுக்காக அல்லது தற்போதுள்ள கட்டடங்களில் மாற்றங்கள் செய்வதற்காக (268 ம் அத்தியாயமான) வீடமைப்பு, நகரச் சீர்திருத்தக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் அங்கீகாரத்துக்காக சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள், மாதிரிப் படங்கள், வரைவுப் படங்கள், விபரக் கூற்று ஆகியவற்றைப் பரிசோதனை செய்து, பரிசீலனை செய்வது சம்பந்தமாகச் செலுத்தப்படுதல் வேண்டும்.

2. (1) துணைவிதி 1 இன் கீழ்ச் செலுத்தப்படற்பாலதான கட்டணத் தொகை, விடயத்திற்கேற்ப, விசேட ஆணையாளரிடமிருந்து அல்லது

மொனருகலைப் பட்டின சபைத் தலைவரிடமிருந்து கோரிக்கை ஒன்று கிடைக்கப் பெற்ற திகதியிலிருந்து ஏழு நாட்களுள், அங்கீகாரத்துக்கு அல்லது சம்மதத்துக்காக விண்ணப்பம் செய்பவரினால் செலுத்தப்படல் வேண்டும்.

(2) இத்துணை விதியின் மேற்போந்த பந்தியில் விதிக்கப்பட்டுள்ள காலப் பகுதியினுள் அத்தகைய கட்டணத்தைச் செலுத்தத் தவறும் ஒவ்வொரு நபரும், ஒரு குற்றத்தைச் செய்த குற்றவாளியாகி, குற்றவாளியாகக் காணப்பட்டதன் மேல் நூறு ரூபாவுக்கு மேற்படாத அபராதமொன்று விதிக்கப்படற்பாத்திராவர்.

(3) துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணம் செலுத்தப்படும் வரை விண்ணப்பம், மாதிரிப்படம், வரைவுப் படம் அல்லது விபரக் கூற்று எதுவும் பரிசோதனை அல்லது பரிசீலனை செய்யப்படலாகாது.

அட்டவணை

1. புதிய கட்டடங்களுக்கான அல்லது மேலதிக நிலப்பரப்பு சம்பந்தப்பட்டதான தற்போதுள்ள கட்டடங்களில் உள்ள மாற்றங்களுக்கான மாதிரிப் படங்கள் :

| | ரூ. | ச. |
|---|---|---|
| (அ) மொத்த நிலப்பரப்பு 600 சதுர அடிக்கு மேற்படாத விடத்து .. .. .. | 3 | 0 |
| (ஆ) மொத்த நிலப்பரப்பு 600 சதுர அடிக்கு மேற்பட்டு ஆனால் 1,000 சதுர அடிக்கு மேற்படாத விடத்து | 7 | 0 |
| (இ) மொத்த நிலப்பரப்பு 1,000 சதுர அடிக்கு மேற்பட்டு ஆனால் 2,000 சதுர அடிக்கு மேற்படாதவிடத்து .. | 20 | 0 |
| (ஈ) மேலதிக ஒவ்வொரு 1,000 சதுர அடிக்கு அல்லது அதன் பாகத்துக்கு .. .. | 5 | 0 |
| 2. மேலதிக நிலப்பரப்புச் சம்பந்தப்படாத தற்போதுள்ள கட்டடங்களில் மாற்றங்கள் செய்வதற்கான மாதிரிப் படங்களுக்கு .. .. | 5 | 0 |
| 3. புதிய மாதிரிப் படங்கள் எதுவுஞ் சமர்ப்பிக்கப்படாமல் புதுப்பித்தல் அல்லது அங்கீகரிப்பதற்கான விண்ணப்பத்தின் விடயத்தில் .. | 10 | 0 |
| 4. கட்டட அனுமதிப் பத்திரங்களின் செல்லுபடியான காலத்தை நீடிப்பதற்கானதொரு விண்ணப்பத்தின் விடயத்தில் .. .. | 3 | 0 |

இந்த அட்டவணையில் " நிலப்பரப்பு " என்பது கீழ்த் தளத்தில் அல்லது வேறெந்த மாடியிலுமுள்ள இடம் எனப் பொருள்படும்.

2–193—07.02.75 ந் திகதிய வர்த்தமானி இல. 150

# நானாவித அறிவித்தல்கள்

## நாவிதன்வெளி கிராமப் பிரதேசம்

கசாப்புக்காரர் கட்டளைச் சட்டம்

கசாப்புக்காரர் பற்றிய சட்டத்தின் அத்தியாயம் 272, 7 ம் பிரிவின் தாற்பரியப்படி இதன் கீழ்க்காணும் அட்டவணையிற் காணப்படும் பேர்வழிக்காரரிடமிருந்து 1975 ம் ஆண்டு தை மாதம் 1 ந் திகதி தொடக்கம் மார்கழி மாதம் 31 ந் திகதி வரைக்கும் கசாப்புத் தொழில் நடாத்த அனுமதி தரும்படி விண்ணப்பம் கிடைத்துள்ளது.

நாவிதன்வெளி கிராமப் பிரதேச இடப்பரப்பில் வசிப்போர் எவரேனும் குறிக்கப்படும் அனுமதி வழங்குவதை மறுக்க விரும்பின் மறுப்புக்கான காரணங்களை இவ்வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 14 நாட்களுக்குள் இணைப்பிரதிகளில் எனக்கு அனுப்பிவைக்கும்படி இத்தால் வேண்டப்படுகிறது.

ஆர். உருத்திரநாதன்,
நிருவாகஸ்தர்,
நாவிதன்வெளிக் கிராமப் பிரதேசம்.

நிருவாகஸ்தர் காரியாலயம்,
நாவிதன்வெளிக் கிராமப் பிரதேசம்,
நாவிதன்வெளி, கல்முனை.

அட்டவணை

| விண்ணப்பகாரன் பெயர் | வியாபாரத்தின் தன்மை | வியாபார நிலையம் |
|---|---|---|
| 1. இப்றுலெவ்வை ஆதம்பாவா .. | மாட்டிறைச்சி .. | 12 ம் கொலனி |
| 2. இப்றுலெவ்வை ஆதம்பாவா .. | மாட்டிறைச்சி .. | மத்தியமுகாம் |
| 3. எஸ். எம். இஸ்மாயில் .. | மாட்டிறைச்சி .. | சவளக்கடை |

2–98—07.02.75 ந் திகதிய வர்த்தமானி இல. 150

## ஏறுவூர் பட்டின சபை

கசாப்புக்காரர் கட்டளைச் சட்டம்

கசாப்புக்காரர் கட்டளைச் சட்டத்தின் 273 ம் அத்தியாயத்தின் 7 ம் பிரிவின் தாற்பரியப்படி இதன் கீழ் அட்டவணையில் காணப்படும் பேர்வழிகாரர்களிடமிருந்து 1975 ம் ஆண்டுக்கு கசாப்புத்தொழில் நடாத்த அனுமதிவழங்கும்படி கோரும் விண்ணப்பங்கள் கிடைத்திருக்கின்றன. இந்தப் படினசபை இடாப்பிற்குள் வசிப்போர் எவரேனும் இங்கு குறிப்பிட்ட அனுமதி வழங்குவதை மறுக்க விரும்பினால் மறுப்பிற்கான காரணங்களை இவ்வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 14 நாட்களுக்குள் இணைப்பிரதிகளில் எமக்கு அனுப்பிவைக்கும்படி இத்தால் வேண்டப்படுகின்றனர்.

எம். ஏ. சீ. ஏ. றகுமான்,
தலைவர்,
பட்டினசபை, ஏறுவூர்.

பட்டினசபை அலுவலகம்,
ஏறுவூர், 08.01.75.

அட்டவணை

| விண்ணப்பக்காரரின் பெயரும் விலாசமும் | வியாபாரம் செய்யவிருக்கும் இடம் மாட்டிறைச்சிக்கான கடை |
|---|---|
| 1. மகுமூதுலெவ்வை எம். மீரா சாய்பு, 87, பளத்தா வீதி, ஏறுவூர், 1 ம் குறிச்சி .. | இல. 131, மட்டக்களப்பு வீதி, 4 ம் வாட் ஏறுவூர் |
| 2. இஸ்மாயில் சின்னத்தம்பி, 156, முனையவளவு வீதி, ஏறுவூர், 1 ம் குறிச்சி .. | இல. 123, 4 ம் வாட், ஏறுவூர் |
| 3. முகம்மதுசரீப், கச்சிமுகம்மது, 702, பழையபிஸ் ஒழுங்கை, ஏறுவூர் 1 .. | இல. 66, மட்டக்களப்பு வீதி, 5 ம் வாட், ஏறுவூர் |
| 4. முகம்மது கனிபா வெள்ளைத்தம்பி, காந்தி லேன், 2 ம் வட்டாரம் .. | இல. 20, புன்னைக்குடா வீதி, ஏறுவூர் |
| 5. வெள்ளைத்தம்பி, முகம்மது கனிபா, காந்தி லேன், 2 ம் வாட், ஏறுவூர் .. | இல. 18, புன்னைக்குடா வீதி, ஏறுவூர் |
| 6. எம். நெயினாமுகம்மது, 122, பெண்பாடசாலை வீதி, ஏறுவூர், 3 .. | இல. 39, புன்னைக்குடா வீதி, 2 ம் வட், ஏறுவூர் |
| 7. எம். நெயினாமுகம்மது, 122, பெண்பாடசாலை வீதி, ஏறுவூர், 3 .. | புதியசந்தை ஆட்டிறைச்சிக் கடை, ஏறுவூர், 2 |

2–144—07.02.75 ந் திகதிய வர்த்தமானி இல. 150

## ஏறுவூர் வடக்குக் கிராமச் சபை—வந்தாறுமூலை

### இறைச்சிக்காரர் பற்றிய சட்ட அறிவித்தல்

இறைச்சிக்காரர் பற்றிய 1947 ம் ஆண்டின் 44 ம் இலக்கத் திருத்தச் சட்டத்தின் 7 ம் பிரிவின் தாற்பரியப்படி இதன்கீழ் காணப்படும் அட்டவணையில் காண்போரிடமிருந்து 1975 ம் ஆண்டுக்கு லைசன்ஸ் தருமாறு விண்ணப்பங்கள் கிடைத்திருக்கின்றன.

இந்தக் கிராமச் சபையின் இடப்பரப்பில் வசிப்போர் எவரேனும் லைசன்ஸ் கொடுப்பதையிட்டு மறுப்பதற்கான காரணங்களை இவ்வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 14 நாட்களுக்குள் இணைப்பிரதியில் எனக்கு அனுப்பி வைக்கும்படி இத்தால் வேண்டப்படுகிறது.

அட்டவணை

| விண்ணப்பகாரர் பெயர் | விலாசம் | செய்யும் வியாபாரம் | வியாபாரம் செய்யும் இடம் |
|---|---|---|---|
| யா. அபுசாலி | 3 ம் குறிச்சி, ஏறுவூர் | ஆட்டிறைச்சி | செங்கலடி இறைச்சிக்கடை |

கி.ச. அலுவலகம்,
ஏறுவூர் வடக்கு,
வந்தாறுமூலை, 06.01.75.

ச சற்குணனந்தம், ஜே. பி.,
தலைவர், ஏறுவூர் வடக்கு,
கிராமச்சபை, வந்தாறுமூலை.

2–146—07.02.75 ந் திகதிய வர்த்தமானி இல. 150

---

## ஓட்டமாவடி கிராமச் சபை

### இறைச்சிக்கடைக்காரர்கள் பற்றிய சட்ட அறிவித்தல்கள்

இறைச்சிக்கடைக்காரர்கள் பற்றிய 1947 ம் ஆண்டின் 44 ம் இலக்கத் திருத்தச் சட்டத்தின் 7 ம் பிரிவின் தாற்பரியப்படி இதன்கீழ் காண்போரிடமிருந்து 1975 ம் ஆண்டிற்கு லைசென்ஸ் தரும்படி விண்ணப்பங்கள் கிடைத்திருக்கின்றது.

இந்தக் கிராமச்சபை இடப்பரப்பில் வசிப்போர் எவரேனும் லைசென்ஸ் கொடுப்பதை மறுக்க விரும்பினல் காரணங்களை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து பதினைந்து நாட்களுக்குள் இணைப்பிரதிகளாக எனக்கு அனுப்பி வைக்கும்படி தயவாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

| விண்ணப்பகாரர் பெயர் | விலாசம் | செய்யவிரும்பும் தொழில் | வியாபாரம் செய்யுமிடம் |
|---|---|---|---|
| 1. எம். எஸ். எம். வுகாரி | 4 ம் வாட், மீராவோடை | மாட்டிறைச்சி | ஓட்டமாவடி மார்கட் |
| 2. ஏ. அலியார் | 4 ம் வாட், மீராவோடை | மாட்டிறைச்சி | ஓட்டமாவடி மார்கட் |
| 3. எம். கே. எம். கனிபா | 1 ம் வாட், ஓட்டமாவடி | மாட்டிறைச்சி | ஓட்டமாவடி மார்கட் றோட் |
| 4. எம். அகம்மதுலெவ்வை | 5 ம் வாட், மீராவோடை | மாட்டிறைச்சி | மீராவோடை மார்கட் |
| 5. யு. எல். பாறூக் | 1 ம் வாட், ஓட்டமாவடி | ஆட்டிறைச்சி | ஓட்டமாவடி மெயின் றோட் |
| 6. எச். எல். ஐதுரூஸ் | 1 ம் வாட், ஓட்டமாவடி | ஆட்டிறைச்சி | ஓட்டமாவடி மெயின் றோட் |

கிராமச்சபைக் காரியாலயம்,
ஓட்டமாவடி,
வாழைச்சேனை, 16.01.75.

உ. முகம்மது சரீப், ஜே. பீ.,
கிராமச்சபைத் தலைவர், ஓட்டமாவடி.

2–104—07.02.75 ந் திகதிய வர்த்தமானி இல 150

---

## இறக்காமம் கிராமப் பிரதேசம்

### இறைச்சிக்காரர் பற்றிய அறிவித்தல்

இறைச்சிக்காரர் பற்றிய கட்டளைச்சட்டம் (அத்தியாயம் 272) 7 ம் பிரிவின் தாற்பரியப்படி இதன்கீழ் காணப்படும் அட்டவணையில் காண்பவர்களிடம் இருந்து 1975 ம் ஆண்டுக்கு இறைச்சிக்கடைக்கு அனுமதிப்பத்திரம் தரும்படி விண்ணப்பம் கிடைத்துள்ளது.

இக்கிராமப் பிரதேச இடப்பரப்பில் வசிக்கும் எவரேனும் அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவதை மறுக்க விரும்பின் மறுப்புக்கான காரணத்தை இந்த அறிவித்தல் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட திகதியில் இருந்து பதினன்கு நாட்களுக்குள் எனக்கு இரு பிரதிகளுடன் அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

அட்டவணை

| விண்ணப்பகாரரின் பெயர் | வியாபாரத்தின் தன்மை | வியாபாரம் செய்யும் இடம் |
|---|---|---|
| 1. எம். எஸ். ஜமால்தீன் | மாட்டிறைச்சி | 5 ம் வட்டாரம் இறக்காமம் |
| 2. எம். எஸ். தாஜுதீன் | மாட்டிறைச்சி | வரிபத்தான்சேனை சந்தி |

இறக்காமம் கிராமப்பிரதேச அலுவலகம்,
இறக்காமம், 17.01.75

ஆ. பா. விஜயரத்தினம்,
நிர்வாகஸ்தர்.

2–45—07.02.75 ந் திகதிய வர்த்தமானி இல. 150

**மட்டக்களப்பு மாவட்டம் ஓட்டமாவடி கிராமாட்சி மன்றப் பிரதேசம் கட்டிடப் பிரதேசமாக பிரகடனப்படுத்துதல்**

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கோறளைப்பற்று காரியாதிகாரி பிரிவிலுள்ள ஓட்டமாவடி கிராமாட்சிப் பிரதேசத்திலுள்ள கீழே அட்டவணையில் விபரிக்கப்படும் எல்லைக்குள்ளுள்ள பிரதேசம் கிராம சபைகள் கட்டளைச் சட்டம் 257 ம் அத்தியாயம் 37 ஏ. உபபிரிவுக்கமைய மட்டக்களப்பு உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் அங்கீகாரத்துடன் கட்டிடப் பிரதேசம் எனப் பிரகடனப்படுத்தப் பட்டுள்ளது என பொது மக்கள் அறியும் வண்ணம் இத்தால் அறியத்தருகிறேன்.

உ. முகம்மது சரீப் ஜே.பி.,
தலைவர், கி. ச. ஓட்டமாவடி.

ஓட்டமாவடி கிராமாட்சி மன்றம்,
வாழைச்சேனை,
1974, மார்கழி மாதம் 31 ம் திகதி.

**அட்டவணை**

**கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனத்துக்குரிய உரிய பகுதிகள்**

வடக்கு: கொழும்பு—பெருந்தெருக்கள் திணைக்கள றோட்.
கிழக்கு: ஓட்டமாவடி—வாகனேரி றோட்.
மேற்கு: கடவத்தை மடு.
தெற்கு: சாந்தி ஆறு—வகனேரிக்குளம், மதுறு ஓயா.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள எல்லைக்குள் உள்ள சகல தனியார் கட்டிடங்களும் காணிகளும், அரசாங்கக் கட்டிடங்களும் காணிகளும் தவிர்ந்த பிரதேசம்.

2-103—07.02.75 ந் திகதிய வர்த்தமானி இல. 150

---

**கோறளை தெற்கு கிராமாட்சி மன்றம்**

இறைச்சிக் கடைக்காரர் சட்டளைச் சட்டம்

இறைச்சிக் கடைக்காரர் பற்றிய கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 272) இன் 7 (2) ம் பிரிவின் தாற்பரியப்படி இதன் கீழ் காணப்படும் நபரிடமிருந்து 1975 ம் ஆண்டுக்கு இறைச்சிக் கடைக்கு உத்தரவுப் பத்திரம் தரும்படி விண்ணப்பம் கிடைத்துள்ளது.

இக் கிராமாட்சி மன்றத்துக்குட்பட்ட இடப்பரப்பில் வதியும் எவரேனும் உத்தரவுப் பத்திரம் கொடுப்பதை மறுக்க விரும்பினால் மறுப்புக்கான காரணங்களை இந்த அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து பதினன்கு நாட்களுக்கிடையில் இணைப்பிரதிகளில் எழுத்து மூலம் எனக்கு அனுப்பி வைக்கும்படி இத்தால் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

அட்டவணை

| விண்ணப்பக்காரரின் பெயரும் விலாசமும் | வியாபாரம் | வியாபாரம் செய்யும் இடம் |
|---|---|---|
| ஆ. இறம்ளார், 2 ம், வட்டாரம், வாழைச்சேனை .. | .. ஆட்டிறைச்சிக் கடை | .. கிரான் சந்தை |

க. கனகசபை,
தலைவர்,
கோறளை தெற்கு கிராமட்சி மன்றம்.

கிராமாட்சி மன்ற பணிமனை,
கோறளை தெற்கு, கிரான்,
முறக்கொட்டான்சேனை,
25.01.1975.

2-190—07.02.75 ந் திகதிய வர்த்தமானி இல. 150

---

**வாடகைச் சபை—கல்முனை**

வீடமைப்பு நிர்மாண அமைச்சரால் 1972, மே 20 ஆம் தேதிய 15,001/4 ஆம் இல. அதிவிசேட அரசாங்க கசெற்றிற் பிரசுரிக்கப்பட்ட 1972 ஆம் ஆண்டின் 7 ம் இல. வாடகைச் சட்டத்தின் 43 ம் பிரிவின் கீழும், 46 (2) (ஈ) பிரிவின் கீழும் ஆக்கப்பட்ட ஒழுங்கு விதிக்கிணங்க 1972 ஆம் ஆண்டின் 7 ம் இல. வாடகைச் சட்டத்தின் நோக்கத்திற்காக கல்முனை வாடகைச் சபைக்கு சகல விண்ணப்பங்கள் அனுப்பப்படும் முகவரியும், அத்தகைய விண்ணப்பங்களின் விசாரணைக்காக சபையின அமர்வுகள் நடாத்தப்படும் இடமும் பின் வருமாறு என இத்தால் நான் அறிவிக்கின்றேன்.

யோகம் வேலுப்பிள்ளை,
தலைவர்,
வாடகைச் சபை, கல்முனை.

வாடகைச் சபை, கல்முனை,
1975 ம் ஆண்டு ஜனவரி மீ 22 ந் வ.

2-993/1—07.02.75 ந் திகதிய வர்த்தமானி இல. 150

---

**வாடகைச் சபை—கல்முனை**

சம்மாந்துறை பட்டின சபைப்பிரிவு கல்முனை வாடகைச் சபையுடன் ஒருங்கிணைத்தல்.

வீடமைப்பு நிர்மாண அமைச்சரால் 1975 வருஷம் தை மாதம் 7 ஆம் தேதி தொடக்கம் மேற்படி சம்மாந்துறை பட்டன்சபையின் வாடகைச் சபை பிரிவு கல்முனை வாடகைச் சபை பிரிவுடன் ஒழுங்கிணைக்கப் பட்டிருக்கிறது. எனவே வாடகைச் சட்டத்தின் நோக்கத்திற்காக சகல விண்ணப்பங்களும் தலைவர், வாடகைச் சபை, கல்முனை என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கும்படி அறிவிக்கின்றேன்.

யோகம் வேலுப்பிள்ளை,
தலைவர்,
வாடகைச் சபை, கல்முனை.

1975 ம் ஆண்டு ஜனவரி மீ 22 ந் வ.

2-993/2—07.02.75 ந் திகதிய வர்த்தமானி இல. 150

---

**கரைவாகு வடக்குக் கிராமச் சபை**

இறைச்சிக்காரர் பற்றிய சட்ட அறிவித்தல் (272 வது அத்தியாயம்)

இறைச்சிக்காரர் பற்றிய 1946 ம் ஆண்டின் 44 ம் இலக்கத் திருத்தச் சட்டத்தின் 7 ம் பிரிவின் தாற்பரியப்படி இதன் கீழ் காணும் அட்டவணையில் காண்போரிடமிருந்து 1975 ம் ஆண்டுக்கு மாடடித்து இறைச்சி விற்பதற்கான உத்தரவுப் பத்திரம் தருமாறு விண்ணப்பங்கள் கிடைத்திருக்கின்றன.

இக்கிராம சபை இடப்பரப்பில் வசிப்போர் எவரேனும் மேற்குறிப்பிட்ட உத்தரவுப் பத்திரம் வழங்குவதை மறுக்கவிரும்பின் மறுப்பதற்கான காரணங்களை இவ்வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து (7) ஏழு நாட்களுக்குள் இணைப்பிரதிகளாக எமக்கனுப்பி வைக்கும்படி இத்தால் கேட்கப்படுகின்றனர்.

| தொ. இல | விண்ணப்பகாரர் பெயர் | விலாசம் | தொழில் செய்யுமிடம் | தொழில் |
|---|---|---|---|---|
| 1 | முகமதிபுருகிம் மீராசாய்வு | மருதமுனை—1 | கிராமச்சந்தை | மாடடித்து இறைச்சி விற்றல் |
| 2 | முகம்மதனிபா அப்துல்மஜீது | பெரியநீலாவணை—2 | டி | டி |

எச். எம். டபிள்யு. சந்திரரத்தின,
நிர்வாக அதிகாரி,
கரைவாகு வடக்கு, கிராம சபை.

கிராம சபைக் காரியாலயம்,
கரைவாகு வடக்கு,
பெரியநீலாவணை,
1975.01.22.

2-995—07.02.75 ந் திகதிய வர்த்தமானி இல. 150

## அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய கிரய விகிதங்கள்

1.12.1968 தொடங்கி அமுலுக்கு வந்தது

# இலங்கைக் குடியரசு வர்த்தமானி

## வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவர்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. காரியாலய நேரம் மு. ப. 8.00 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 2.45 மணி வரை நடைபெறும்.

5. சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படல் வேண்டும். தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணிஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. நகலை கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதுதல் விசேஷமாக ரைப் அடித்தல் பிழைகளேயும், காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும்.

7. கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.

8. வியாபார விளம்பரங்களும், பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்படவேண்டிய விளம்பரங்கள் " சுப்பிறீம் கோட் புறொக்ரரால் " கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்படமாட்டா.

10. அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 1968 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 01 ந் திகதியிலிருந்து பின்வருமாறு :—

| | ரூ. | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய .. .. .. | 20 | 0 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலம் அல்லது அதன் பகுதி .. .. | 20 | 0 |
| ஒரு பந்தி அல்லது வர்த்தமானியின் ½ பக்கம் .. .. .. | 220 | 0 |
| இரு பந்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் .. .. .. | 440 | 0 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைக் குடியரசு வர்த்தமானி வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. 1966 ம் ஆண்டு மார்ச் மாதம் 01 ந் திகதி தொடக்கம் வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்து சேர வேண்டும்.

13. சந்தா விபரம் 1.12.68 ந் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும்.

| இலங்கைக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | உள்ளூர் | | வெளியூர் | |
|---|---|---|---|---|
| | ரூ. | ச. | ரூ. | ச. |
| ஒவ்வொரு பகுதியும் .. .. .. .. | 46 | 0 .. | 60 | 0 |
| முதற் பகுதியின் தனிப் பிரிவு .. .. .. | 36 | 0 .. | 42 | 0 |
| முதற் பகுதியின் இரு பிரிவுகள் .. .. .. | 43 | 50 .. | 51 | 50 |

ஆறு மாதங்களுக்குக் குறையாமலும், வருட முடிவிலும், அரை வருடத்திலும் முடிவடையக் கூடியதுமான காலவெல்லேக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.

### தனிப்பட்ட பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்

| | விலை | தபாற் செலவு (உள்ளூர்) |
|---|---|---|
| | ரூ. ச. | ரூ. ச. |
| (அ) (i) வர்த்தமானியில் இடம்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் ஒவ்வொரு பகுதியும் .. .. | 0 50 | .. 0 20 |
| (ii) வர்த்தமானியில் இடம்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குப் பின் ஒவ்வொரு பகுதியும் .. .. | 1 0 | .. 0 20 |
| (ஆ) (i) வர்த்தமானியில் இடம்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் முதற் பகுதியின் ஒவ்வொரு பிரிவும் .. | 0 30 | .. 0 15 |
| (ii) வர்த்தமானியில் இடம்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குப் பின் முதற் பகுதியின் ஒவ்வொரு பிரிவும் .. | 0 60 | .. 0 15 |

இவைகளில் எவையேனும் பெறவிரும்புவோர் சரியான பணத் தொகையை அதிபர், அரசாங்க பிரசுரநிலையம், தபாற் பெட்டி இல. 500, கொழும்பு என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப் பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவார்.

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு** என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**முக்கிய கவனிப்பு.**—குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா என்பதையும் கவனத்திற் கொள்க.

**அட்டவணை—1975**

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|
| **பெப்புருவரி** .. .. | வெள்ளி | 7.2.75 .. | 12 மதியம் .. | வெள்ளி | 31.1.75 |
| | வெள்ளி | 14.2.75 .. | 12 மதியம் .. | வெள்ளி | 7.2.75 |
| | வெள்ளி | 21.2.75 .. | 12 மதியம் .. | வெள்ளி | 14.2.75 |
| | வெள்ளி | 28.2.75 .. | 12 மதியம் .. | வெள்ளி | 21.2.75 |
| **மார்ச்சு** .. .. | வெள்ளி | 7.3.75 .. | 12 மதியம் .. | வெள்ளி | 28.2.75 |
| | வெள்ளி | 14.3.75 .. | 12 மதியம் .. | வெள்ளி | 7.3.75 |
| | வெள்ளி | 21.3.75 .. | 12 மதியம் .. | வெள்ளி | 14.3.75 |
| | வியாழன் | 27.3.75 .. | 12 மதியம் .. | வெள்ளி | 21.3.75 |
| **ஏப்பிறல்** .. .. | வெள்ளி | 4.4.75 .. | 12 மதியம் .. | வியாழன் | 27.3.75 |
| | வெள்ளி | 11.4.75 .. | 12 மதியம் .. | வெள்ளி | 4.4.75 |
| | வெள்ளி | 18.4.75 .. | 12 மதியம் .. | வெள்ளி | 11.4.75 |
| | வியாழன் | 24.4.75 .. | 12 மதியம் .. | வெள்ளி | 18.4.75 |
| **மே** | வெள்ளி | 2.5.75 .. | 12 மதியம் .. | வியாழன் | 24.4.75 |
| | வெள்ளி | 9.5.75 .. | 12 மதியம் .. | வெள்ளி | 2.5.75 |
| | வெள்ளி | 16.5.75 .. | 12 மதியம் .. | வெள்ளி | 9.5.75 |
| | வெள்ளி | 23.5.75 .. | 12 மதியம் .. | வெள்ளி | 16.5.75 |
| | வெள்ளி | 30.5.75 .. | 12 மதியம் .. | வெள்ளி | 23.5.75 |
| **யூன்** .. .. | வெள்ளி | 6.6.75 .. | 12 மதியம் .. | வெள்ளி | 30.5.75 |
| | வெள்ளி | 13.6.75 .. | 12 மதியம் .. | வெள்ளி | 6.6.75 |
| | வெள்ளி | 20.6.75 .. | 12 மதியம் .. | வெள்ளி | 13.6.75 |
| | வெள்ளி | 27.6.75 .. | 12 மதியம் .. | வெள்ளி | 20.6.75 |

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1975 ம் ஆண்டு சனவரி மீ 01 ந் உ.

**எஸ். டபிள்யூ. பீ. பீரிஸ்,**
அரசாங்க அழுத்தகர்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.